வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

உங்கள் இல்லங்களில்
நீங்கும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 18 புதன்கிழமை (02 – 03 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 95

### கிழக்கிலும் வவுனியாவிலும்

# பலத்த பாதுகாப்பு கெடுபிடிகளுடன் வாக்களிப்பு

# எனினும் ஆங்காங்கே பல அசம்பாவிதங்கள்

## தேர்தல் குளறுபடிகளில் படையினர்

கொழும்பு, மார்ச் 2

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ள முப் படைகள், பொலீஸ் மற்றும் தொண்டர் படைகளின் கடும் கெடுபிடிகளுக்கு மத்தியில் நேற்று அங்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற்றது.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் ஆங்காங்கே பல அசம்பாவிதங்கள் இடம்பெற்றன.

படையினர் அரசுக்கு ஆதரவாக தேர்தல் குளறுபடிகளிலும், முறைகேடுகளிலும் பரவலாக ஈடுபட்டதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அரைவாசிப் பேர், 15 ஆயிரத்துக்கும் அதிகமான பொலீஸார், மற்றும் ஊர்காவற் படை, அதிரடிப்படை, தொண்டர் படை ஆகியவற்றைச் சேர்ந்தோர் ஆகியோரும் —

கிழக்குக் கரையில் கடற்படைக் கப்பல்கள், பீரங்கிக் கப்பல் ஆகியவையும் —

விமானப் படையின் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவையும் —

கடும் பாதுகாப்பு வழங்க நேற்று வாக்களிப்பு இடம் பெற்றது.

நேற்றுக் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப் பதிவு இடம்பெற்றது.

அளிக்கப்பட்ட வாக்குகள் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலகங்களுக்கு எடுத்துவரப் பட்டதும் நேற்று முன்னிரவில் வாக்குகள் எண்ணும் வேலைகள் ஆரம்பமாகின.

பல இடங்களில் வாக்களிப்பின் போது படையினரும் பொலீஸாரும் பல்வேறு குளறுபடிகளிலும், முறைகேடுகளிலும் ஈடுபட்டதாகவும் —

வாக்களிப்பில் தலையீடு செய்ததாகவும் —

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஏறாவூர், காத்தான்குடிப் பகுதிகளில்

## பெட்டிகளில் வாக்குகளை நிரப்பிய ஆயுதக் குழு!

நேற்று கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பின் போது—

ஏறாவூர், காத்தான்குடி ஆகிய இடங்களில் உள்ள மூன்று வாக்களிப்பு நிலையங்களினுள் பிரவேசித்த ஆயுதம் தரித்த குழுவினர், ஆகாயத்தை நோக்கிச் சுட்டு, வாக்காளர்களைக் கலைத்தனர்.

பின்னர் வாக்குப் பெட்டிகளை தாங்களே நிரப்பினர்.

செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.

வாக்களிப்பு ஆரம்பமாகி ஒரு மணி நேரத்துக்குள்ளேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

பொலீஸாரே இந்தமுறை கேடுகளில் ஈடுபட்டதாக பிரதமருக்கும் அரச உயர் பீடத்துக்கும் உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் உத்தரவின் பேரில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வணசிங்கா இச்சம்பவம் பற்றி விசாரிக்க அங்கு அனுப்பப்பட்டார்.

### வாக்களிப்பு நிலையங்களுக்கு

## வாக்குகள் நிரப்பிய நிலையில் எடுத்து வரப்பட்ட பெட்டிகள்!

கிழக்கில் பல இடங்களில் வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னரே அவற்றுக்குள் வாக்குகள் நிரப்பப் பட்டிருந்ததாக தமிழ்க் குழுக்கள் தெரிவித்துள்ளன.

வழமையாக வாக்குப் பெட்டிகள் அனைத்து வேட்பாளர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் முன்னிலையில் திறந்து காட்டப்பட்ட பின்னரே சீல் வைக்கப்பட்டு, அதன் பின்பே வாக்களிப்பு ஆரம்பமாகும்.

ஆனால் மட்டக்களப்பில் ஓரிடத்தில் வாக்களிப்பு நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்ட வாக்குப்பெட்டி ஏற்கனவே 'சீல்' செய்யப்பட்டிருந்ததாம்.

அதனுள் ஏற்கனவே வாக்குகள் போடப்பட்டிருக்கக்கூடும் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கில் ஊரடங்கு

கொழும்பு, மார்ச். 2

கிழக்கில் மூன்று மாவட்டங்களிலும் நேற்று இரவு ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய அந்த மூன்று மாவட்டங்களிலும் நேற்றிரவு 10 மணி தொடக்கம் இன்று காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## கொழும்பு நகரில் நேற்று படையினர் உஷார் நிலையில்

கொழும்பு, மார்ச். 2

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் நேற்று இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களை ஒட்டி கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. படையினர் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையப் பகுதியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

தலைநகரில் மேலதிகப் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்று பிரதிப் பொலீஸ்மா அதிபர் ருக்மன் டி சில்வா தெரிவித்தார். (ஒ எ 6)

## ஆனையிறவில் புலிகள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பு, மார்ச் 2

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல மேற்கொள்ளக்கூடும் என்று தகவல் கிடைத்துள்ளதாகவும் —

அதனால் அப்பகுதியில் இராணுவப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் —

வடபகுதி இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி "தினமின" சிங்கள நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டது. (உ-எ-6)

## முந்தல் பொலீஸில் நேற்று வெடி விபத்து!

கொழும்பு, மார்ச் 2

புத்தளம் மாவட்டம் முந்தல் பொலீஸ் நிலையத்தில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஏற்பட்ட வெடி விபத்தில் நான்கு பொலீஸாரும், இரு சிப்பாய்களும், இரு பொதுமக்களும் கடுமையாகக் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றிய மேதிக விவரங்கள் வெளியாகவில்லை. (ஒ எ-6)

## கப்பலில் வந்த இளைஞர் காங்கேசனில் கைதானார்

யாழ்ப்பாணம், மார்ச் 2

திருகோணமலையில் இருந்து 'நரோமா' கப்பலில் காங்கேசன்துறைக்கு நேற்றுக்காலை வந்து சேர்ந்த பயணிகளில் ஒருவரான தமிழ் இளைஞரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

'நரோமா' வில் வந்த பயணிகள் மூன்று மணித்தியாலயங்கள் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் —

35 வயதான பிரஸ்தாப இளைஞரை படையினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-9)

### 250 பொலீஸார் திரண்டு சென்று

## பேராதனை பல்கலைக்கழக மாணவர் மீது தாக்குதல்

கொழும்பு, மார்ச் 2

பேராதனைப் பல்கலைக் கழக உபவேந்தரின் இல்லத்தை முற்றுகையிட்ட மாணவரைக் கலைக்க ஆயுதம் தரித்த பொலீஸார் பலாத்காரம் பாவித்தனர் என்றும்—

சீருடையிலும் சிவிலிய உடையிலும் ஆயுதங்களுடன் வந்த 250க்கு மேற்பட்ட பொலீஸார் மாணவர்களைத் தாக்கினார்கள் என்றும்—

இதில் காயமடைந்த சில மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர் என்றும் பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் டபிள்யு. கே. டி. டயஸ் தெரிவித்தார்.

வேறு பல மாணவர்கள் சிறு காயங்களுக்குள்ளாகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பேராதனைச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று நண்பகல் கொழும்பு வார்ட் பிளேஸில் உள்ள பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு முன்னால் சுமார் 500 பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி

அயல் நாட்டுக்காரர் இங்கு தேர்தல் நடத்தியதுபோல உவையளும் ஒரு சுத்துமாத்து தேர்தலை நடத்தி முடிச்சிட்டினம்.....!

## படகுச் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 2

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று நடைபெறமாட்டாது என விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

## தேர்தல் முடிவு வெளியானது

கொழும்பு, மார்ச் 2

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் நேற்று நடந்த உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் நேற்று நள்ளிரவில் வெளிவரத் தொடங்கின.

முதலாவதாக வவுனியா நகரசபைக்கான முடிவு வெளியானது. வவுனியா நகரசபையை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது இடத்தை ஐ. தே. கவும், மூன்றாவது இடத்தை தமிழ் ஈழ விடுதலை முன்னணியும், நான்காவது இடத்தை முஸ்லிம் காங்கிரஸும் பெற்றிருந்தன.

அறிவிக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

வவுனியா நகர சபை.

| | பெற்றவாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| ஜ. ம. வி. மு. | 4,179 | 7 |
| ஐ. தே. க. | 1,649 | 2 |
| த. ஈ. வி. மு. | 713 | 1 |
| மு. கா. | 437 | 1 |

திருகோணமலை மாவட்டம்
மொறவேவ பிரதேச சபை

| | பெற்றவாக்குகள் | உறுப்பினர் |
|---|---|---|
| ஐ. தே. க | 1844 | 6 |
| சு. க. | 722 | 3 |

## வாகன ஆவணங்களை எடுத்துச் செல்லுங்கள்

### காவல்துறை பொறுப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச். 2

சகல வாகன உரிமையாளர்களையும் வாகனங்களில் செல்லும் போது அவற்றுக்குரிய ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறும்—

முக்கியமாக 1993 ஆம் ஆண்டிற்கான இறைவரிப் பற்றுச்சீட்டை எடுத்துச் செல்லுமாறும்—

தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் வாகன உரிமையாளருக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பெரும்பாலான வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களை பதிவு செய்து கொண்டுள்ளார்கள். பதிவு செய்யாத ஒரு சிலர் வாகன உரிமையாளர்கள் மீது நாம் மிக மனவேதனையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முதற்கட்ட நடவடிக்கையாகவே நேற்று தொடக்கம் எமது காவல் துறை உறுப்பினர்கள் வாக

(3ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு முன்

# இலங்கை இனப்பிரச்சினை பற்றி பிரேரணை

ஜெனிவா, மார்ச் 2

ஜெனிவாவில் கடந்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா மனித உரிமை ஆணைக் குழுக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலில் இலங்கை இனப்பிரச்சினையை இடம்பெற வைப்பதில் ஈழத்தமிழ்க் குழுக்கள் மேற்கொண்டுள்ள கண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பல மேற்கு நாடுகளுடனும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களுடனும் இணைந்து ஈழத்தமிழ்க் குழுக்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாகவே இது சாத்தியமாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் குழுக்களின் முயற்சி வெற்றி?

ஐ. நா. ஏஜன்ஸி ஒன்று வடக்கு-கிழக்கு யுத்தம் பற்றி முறைப்படி விவாதிக்கத் திட்டமிட்டுள்ளது இதுவே முதல் தடவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் பிரபலமான ஈழத் தமிழ்க் குழுக்களில் ஒன்று ஐ. நா மனித உரிமை ஆணைக் குழுக் கூட்டத்தில் —

வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய சமஷ்டி அரசமைப்பு ஒன்றை கொண்டு வரும்படி இலங்கை அரசை வற்புறுத்தும் யோசனை ஒன்றை பிரேரிக்கும் என்று அறியப்படுகிறது.

அண்மையில் வெளியான "தி ஐலண்ட்" நாளிதழில் இது பற்றி செய்தி வெளியாகியிருக்கிறது.

### கூடுதல் அதிகாரம்

குறிப்பிட்ட மேற்கு நாடு பிரேரிக்கும் யோசனையில் —

"உத்தேச வடக்கு-கிழக்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

(B) வொயிலர், சலவை மெஷின், சாப்பாட்டு மேசை, ஸ்ரீல் அலுமாரி, கட்டில், ஜெனறேற்றர், உழுந்து அரைக்கும் கிறைண்டர் முதலியன விற்பனைக்குண்டு. சிறீ குறிஞ்சி மெடிக்கல் அருகில், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (29695)

### தேவை

நடமாடும் மருத்துவ சேவைக்கு (Mobile Medical Service) பெண் தாதியர் (Female Nurse) உடன் தேவை. 18 — 30 வயதிற்குட்பட்டோர் 10 – 03 – 1994க்கு முன்பு கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கலாம். அண்மையிலுள்ளோர் விரும்பத்தக்கது. நிர்வாகி விக்ரோரியா ஹாவே தனியார் மருத்துவமனை, இல. 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (29686)

### தவறிவிட்டது

குமாரசாமி கிருஷ்ணசாமி என்பவரது இல. 673043178V என்னும் இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை 28-2-94 அன்று ஸ்ரான்லி றோட் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 79, தேவாலயவீதி யாழ்ப்பாணம். (29694)

26-2-94 சனிக்கிழமை இரவு ஆலங்கேணி இறங்கு துறையில் தோள்பை தவறிவிட்டது. பல்கலைக்கழக அடையாள அட்டையும் முக்கியமான ஆவணங்களும் இருப்பதனால் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். A. தேவேந்திரன், "சதிகாமன்ஸ்" உடுவில் றோட், மருதனார்மடம் சந்தி, ஊரகம். (29683)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தேவைப்படும் அறிவு மட்டம் வரை தனிப்பட்ட முறையிலும் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு: சனி, ஞாயிறு காலை 8.00 — 10-00 மணிக்குள். 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (6999)

### கோழிக்குஞ்சு விற்பனை

Christombu Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல: 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர் (29698)

### பாலர் ஆசிரியராக

தகைமை ஜி.சி.ஈ. (O/L) சனி, ஞாயிறு பயிற்சி வகுப்பு. நேரில் வாமுடியாதோர் தபால்மூலியூடாகப் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7105)

**A/L 94**
வர்த்தகம்
**DAY CLASSES**
ACC. — சௌந்தி
COM — பசில்
ECON. — பிரபாகரன்
**SHAMROCK**
யாழ் சுண்டிக்குளி
(29701)

**O/L& Yr. 10**
விஞ்ஞானம்
Mr J R சூரி
கணிதம்
Mr. தயாளன்
**SHAMROCK**
யாழ். சுண்டிக்குளி
(29702)

ROTARACT CLUB

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில்
யாழ். றோட்டரக்ட் கழகம்
நடத்தும்
உள்ளரங்க விளையாட்டுப் போட்டித் தொடரில்
## மேசைப் பந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

இடம்: Y M C A. மண்டபம், சுண்டிக்குளி
காலம்: 02 — 03 – 1994 (இன்று)
பிற்பகல் 3-30 மணி

பிரதம விருந்தினர்:
Dr T W ஜெயகுலராஜா
(தலைவர், யாழ். Y. M C A.)
திருமதி C. G ஜெயகுலராஜா

சிறப்பு விருந்தினர்கள்:
Rtn P செல்வநாதன்
(தலைவர், றோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம்)
Mr S M பெர்னாண்டோ
(S. M. பெர்னாண்டோ கண்ணாடி நிலையம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ். றோட்டரக்ட் கழகத்தினர்.
[29696]

ஜேர்மன் சமஷ்டி குடியரசின் நிதி உதவியுடன்
## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி.ஆர்.ஆர்.ஓ)
## கன்னாகம் லயன்ஸ் கழகத்தின்
அனுசரணையுடன் இணைந்து நடத்தும்
ஆண், பெண் இருபாலாருக்குமான
## "விவசாய பயிற்சி நெறிகள்"

* பொது விவசாயம்
* ஒட்டுமுறை செய்கை
(பழமர விருத்தி)
ஆரம்பமாகின்றன

தகைமை:- க.பொ.த (சாதாரண தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்
காலம்:- 03 மாதங்கள்
சனி, ஞாயிறு நாட்களில் மட்டும் பயிற்சி நடைபெறும்

குறிப்பு:-
இடம்பெயர்ந்த 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் 05 - 03 - 94 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்விச் சான்றிதழ், அண்மையில் பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களுடன் கீழ்க் காணும் விலாசத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

ரி.ஆர்.ஆர்.ஓ. உப காரியாலயம்
மானிப்பாய் வீதி,
உரும்பிராய்
(சி-7290)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீடடுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு: 04 – 01 – 1919
உதிர்வு: 01 – 02 – 1994

### திருமதி சிரோன்மணி சிவராசா
(குண்டுமணி)

(வல்வை அருந்தவி விலாஸ், முன்னாள் உரிமையாளர் காலஞ்சென்ற திரு சிவராசாவின் மனைவியும் தற்போதைய உரிமையாளர் திரு. மகாலிங்கத்தின் மாமியாரும்.)

நாளை (வியாழக்கிழமை) 03 – 03 – 1994 எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்:
மருமகன், மகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

குருகையன் கோவிலடி,
மாவீரர் வீதி, நீருவில்,
வல்வெட்டித்துறை.

செல். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை
## அணிநடை, அப்பியாச-கட்டளைச் சொற்கள் அறிமுகம்

அணி/வகுப்பு
1. இளகுவாய் நில், – சோம்பு நில், – சீராய் நில். நிரைசீர் செய் - கரங்களை விடு. காலம் குறி டம், லம், டம். - தரித்துநில்/வகுப்தரி ஒன் ரண். இடம் திரும் –வலம் திரும், -பின்திரும் ஒன்ரண். முன்னே செல், – இடமாய்திரும், - வலமாய்திரும். வலம் மரியாதை செய், - முன்னே பாய் / முன்மரியாதை செய் ஒன்ரண் கலைந்து செல், - கணி விரைவாய் காலம் குறி – முன்னே செல்.
2. அணி அப்பியாசம் தொடங் ஒன்ரண் முன் நால் ஐந் ஆர் ஏக் எண் - எண் ஏல் ஆர் ஐந் நால் முன் நில் செய் / மற்றமாறி

க. அருந்தவராசா குழுவினர்,
சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை-(வலி. வடக்கு),
"இதய பவனம்",
டச்கறோட், உடுவில்.
[7104]

யாழ்ப்பாண மாநகரசபை
## வரியிறுப்பாளர்களுக்கான வேண்டுகோள்

சமீபகால அசம்பாவிதங்கள், இராணுவ நடவடிக்கைகள், விமானத் தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக பெரியகடைப் பகுதியில் பாதிப்படைந்த கடைகள், கட்டடங்கள் போன்றவை எமது அங்கீகாரமின்றி திருத்தம் செய்யப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது

மாநகரசபை எல்லைக்குள் புதிய அமைப்பு வேலைகளையோ அல்லது திருத்த வேலைகளையோ ஆரம்பிப்பதற்கு முன்னர் மாநகரசபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28 02-1994
(சி/7294)

## அச்சுக்கோப்பாளர் தேவை

* அனுபவமும் திறமையும் உள்ள இருவர்
* பயிலுநர் இருவர்
* வேலை பழக விரும்புவோர் இருவர்

நேரில் வரவும்
**ஆனந்தா அச்சகம்,**
226, சாங்கோன்துறை வீதி, யாழ்ப்பாணம்
(சி-7426)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் முருகேசு செல்லத்துரை

மண்ணுலகு: 12 – 06 – 1915
விண்ணுலகு: 31 – 01 – 1994

மண்ணுலகைப் பிரிந்து விண்ணுலகு சென்று
நாட்கள் முப்பத்தொன்றே யானாலும்
ஐயா ஐயா என்று தினமும் அரற்றுகிறோம்
ஐயா ஏதும் செப்பாமல் சென்ற இடம் தான் எங்கே
பாயில் படுக்கவில்லை நோயில் அழுந்தவில்லை
கண்மூடித்திறக்கும் ஒரு கணப் பொழுதில்-
மறைந்துவிட்டீரே

ஆறாது ஆறாது தீராது
நீறாகிப் போன நிலை நினைவிலும் மாறாது
மின்னவில்லை முழங்கவில்லை
புயலுடன் தான் பெருமழையோ.

உங்கள் நினைவே எங்களை வழி நடத்தும் என்ற நம்பிக்கையுடன் உங்கள் பாதங்களில் மலர் தூவித் துதிக்கின்றோம். ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (02-03-1994) நடைபெறும் அந்தியேட்டியிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"பிரியாவிடை"
கொடிகாமம் மத்தி,
சோமாவிட்டி.
[29700]

யாழ். லயன்ஸ் கழக ஆதரவுடன்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம்
நடத்தும்
பாடசாலைகளுக்கு இடையிலான
## வருடாந்த சதுரங்க சுற்றுப் போட்டி - 1994

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 6 வீரர்களையும் 1 பதில் வீரரையும் கொண்ட அணிக்கான விண்ணப்பத்தினை தங்களின் பாடசாலை அதிபருக்கூடாக எமது கழகத்திடம் நேரடியாக 10 – 03 - 94 இற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

குறிப்பு:
மேலதிக விவரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
– அதிபர்
(சி-7295)

யாழ் பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்ற நிதிக்காக
யாழ். பல்கலைக்கழக
## நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் சத்தியவான் சாவித்திரி (நாடகம்)
தமிழ் ஈழ விடுதலை அமுதசுரபி கலாமன்றம் வழங்கும்
## பட்டிமன்றம்
தற்கால பண்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் நமது சமுதாயத்தை

| பாதிக்கின்றதா? | இல்லையா? |
|---|---|
| பாதிக்கிறது | பாதிக்கவில்லை |
| தி. வேல்நம்பி | ந. விஜயசுந்தரம் |
| தி. செல்வமனோகரன் | பு. ஸ்ரீஸ்கந்தராஜா |
| இ. நித்தியானந்தன் | க. யோகநாதன் |

நடுவர்:- சொல்வேந்தர் சி. சிவநேசன்

இடம்: நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
காலம்: இன்று (02-03-1994) மாலை 6.30 மணி
அன்பளிப்பு: 10/-
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விளம்பர அன்பளிப்பு:
குரு கிங்ஸ்ரி யூட்
ஆவரங்கால், (29707) புத்தூர்

## 2ஆம் வருட நினைவு நாள்

### கைலாயபிள்ளை கந்தசாமி
(முன்னைநாள் பிரதி அதிபர், யாழ். மத்திய கல்லூரி)

மண்ணகம்: 20-05-1931
விண்ணகம்: 02-03-1992

பெற்றெடுத்தீர் பேணி வளர்த்திட்டீர்
பல்கலைக்கழகம் பயிற்சிக் கலாசாலை சேர்த்திட்டீர்
பார்புகழ வைத்திட்டீர் பாசமுகிள அப்பாவே!

நீங்கள் பிரிந்து ஈராண்டு ஆனாலும் உங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சைவிட்டு அகலா. உங்கள் ஆத்மாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மாமி
36, இலிசியம் வீதி,
தெகிவளை.
(29704)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## ஏமாற்றாதே ஏமாறாதே!

ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாட்டில் ஸ்ரீலங்கா அரசு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் பல விடயங்கள் மறைக்கப்பட்டு விட்டன வாம்

பிரபல மனித உரிமைவாதியும், சட்ட அறிஞருமான பிறின்ஸ் குணசேகரா ஸ்ரீலங்கா அரசின் இந்தப் பொய்மைத் தகவலை அம்பலப்படுத்தி இருக்கிறார். அவரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதால் கொழும்பு அரசின் இயல்பான குணாம்சத்தை ஆதாரத்துடன் வெளிஉலகுக்கு எடுத்துக் காட்ட முடிந்தது.

மேற்கு நாடுகளில் மனித உரிமை மீறல் சம்பவங்களை பாரதூரமாகக் கருதுவதையும், மூன்றாம் உலக நாடுகளின் தலையில் குடுவதற்கு அதனை ஒரு குற்றமாகக் கருதுவதையும் இப்போது தீவிரமாகி உள்ளன.

வளர்முக நாடுகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கு மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதனை ஓர் அரை நிபந்தனை நிலைக்கு மேற்குலகம் உயர்த்தியது கடந்த ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் எனலாம்.

எப்படியோ, சிறுபான்மை இனங்களை அடக்கி ஆள விரும்பும், அவற்றை ஒடுக்கி விட முனையும், ஸ்ரீலங்கா போன்ற நாடுகளுக்கு, மனித உரிமை மீறல் விவகாரத்தை நிதி உதவியுடன் சம்பந்தப்படுத்தும் மேற்கு உலகின் போக்கு பெரும் தொல்லையாக முடிந்து விட்டது.

ஸ்ரீலங்காவைப் பொறுத்த மட்டில் சிறுபான்மை இனங்களை அடக்கி ஆள்வதற்காக இழைக்கும் மனித உரிமை மீறல்களைப் போலவே -

ஆட்சி அதிகாரத்தை ஒரே கட்சியே அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையினால் பெரும்பான்மை இனச் சிங்கள மக்களின் மனித உரிமைகளையும் அதிகாரத்தில் உள்ளவர்கள் பறித்து வருகிறார்கள்.

தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு எவ்வாறு சட்டங்களை இயற்றுகிறார்களோ அல்லது அவற்றை வளைத்து எடுக்கிறார்களோ, அதேபோலவே பெரும்பான்மையினரின் மனித உரிமைகளை மீறுவதற்கும் ஆட்சியில் உள்ளவர்களும் அவர்களைச் சார்ந்த அதிகாரிகளும் செயற்படுகின்றனர்.

ஆனால் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான குற்றச்சாட்டுகள் வரும் போது அவற்றை அரசு ஒப்புக் கொள்வதில்லை. உரிமை மீறல்கள் சம்பந்தமாகத் தான் கவனம் எடுத்து வருவதாகவும், நிலைமை முன்னேற்றம் கண்டு வருவதாகவும் மேனிமினுக்கிய அறிக்கைகளை தயாரித்துக் காட்டித் தமது குற்றங்களை மறைத்து விடுகிறது.

அத்தகைய அறிக்கைகளை ஏற்றுக் கொண்டு, அங்கீகரித்து, ''நல்ல முன்னேற்றம்'' என்று அமெரிக்கா போன்ற நாடுகளே ''சான்றிதழ்கள்'' வழங்கும் வரை, ஸ்ரீலங்கா அரசு தனது மூடி மறைக்கும் தந்திரத்தைத் தொடரவே செய்யும்!

எல்லா விடயங்களிலும் தனது வெட்ட தன்மையை மறைத்துக் கொண்டு, நல்லதையே வெளிக்காட்டும் ''பண்பில்'' பெயர் பெற்றது ஸ்ரீலங்கா அரசாங்கம். தனது நடைமுறை ஒன்றாக இருக்க தனது மதிப்பைப் பாதுகாக்கும் விதத்திலும், தனது பக்கமே சரி என்று காட்டுவதிலும் வியாபார திறமை கொண்டது அரசு.

இந்த விடயத்தில் பிறின்ஸ் குணசேகரா என்ன, எவருமே ஸ்ரீலங்கா அரசைத் திருத்த முடியாது. வழிக்குக் கொண்டு வரவும் இயலாது. ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களுக்கு என்ன கவலை! ஆனால் ஒரு காலத்தில் இது சாராருமே பாதிப்புறும் விதத்தில் ஏமாற நேரிடும்!

4 சோவியத் விமானங்கள் சுடப்பட்ட சம்பவம்

# பதில் தாக்குதல் வேண்டாம்!

# நேட்டோ நேற்று எச்சரிக்கை

பாரிஸ், மார்ச். 2

நான்கு பொஸ்னிய சேர்பிய போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியதற்கு பதிலடியாக பதில் தாக்குதல்களை நடத்தக்கூடாது என்று பொஸ்னியாவில் சண்டையில் ஈடுபட்டுள்ள தரப்புக்களை நேட்டோ இராணுவக் கூட்டின் தலைமைத் தளபதி எச்சரித்துள்ளனர்.

பொஸ்னிய தலைநகர் சரயேவோவின் கிழக்குப் பகுதியில் உள்ள நிலை ஒன்றின் மீது ஆறு போர் விமானங்கள் குண்டுகளை வீசிக் கொண்டிருந்ததை நேட்டோவின் 2 எப் – 16 சண்டை விமானங்கள் அவதானித்ததாகவும் —

குண்டுத் தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படியும் தடை செய்யப்பட்ட ஆல்வான் பிராந்தியத்தில் இருந்து அகன்று செல்லும்படியும் அந்த ஆறு விமானங்களுக்கும் உத்தரவிடப்பட்டதாகவும் —

உத்தரவுக்கு பணிய அவை மறுத்ததைத் தொடர்ந்து அவற்றில் நான்கு விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் நேட்டோ தளபதி அறிவித்தார்.

சுட்டுவீழ்த்தப்பட்ட நான்கு சண்டை விமானங்களும் பொஸ்னிய சேர்பியர்களுடையவை என்பதில் சந்தேகமில்லை என்று சரயேவோவில் உள்ள ஐ நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொஸ்னியாவில் சண்டையிடும் எத்தரப்பினரும் தாங்கள் விமானங்கள் எதையும் இழந்ததாக இதுவரை தகவல் எதனையும் வெளியிடவில்லை என்று பி. பி. வி நேற்று அறிவித்தது.

பொஸ்னியாவில் முஸ்லிம்களுக்கும் சேர்பியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் குறோசியர்களுக்கும் இடையில் சண்டை நடைபெற்று வருவதும் —

தலைநகர் சரயேவோவை முற்றுகையிட்டிருந்த சேர்பிய படைகள், நேட்டோ விடுத்திருந்த 10 நாள் காலக்கெடுவை அடுத்து தமது நிலைகளில் இருந்து பின்வாங்கி இருந்ததும் தெரிந்தவையே.

தலைநகர் சரயேவோவில் மிகவும் பலம்வாய்ந்த முஸ்லிம் தரப்படை ஒன்று நிலை கொண்டுள்ளது.

(இ-எ)

## நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவலகத்திலும், கணக்கியல் அலுவலகத்திலும் 01-10-1992 முதல் தற்காலிக நியமனத்துடன் பணியாற்றிவரும் ஒன்பது எழுது வினைஞர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட உள்ளது. என்று வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார்.

(ஒ-162)

# இஸ்ரேல் – பலஸ்தீன இயக்க சமாதானப் பேச்சு இடை நிறுத்தம்

## இஸ்ரேலியரை நம்ப முடியாது என்கிறார் அராபாத்

செய்ரோ, மார்ச் 2

வகுப்பறிப்பட்ட அரபுப் பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வரை இஸ்ரேலுடனான சமாதானப் பேச்சுகளை இடை நிறுத்தி வைப்பது என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவிக்கிறது.

ரூனிஸியாவில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உயர் நிலைத் தலைவர்களின் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை— பலஸ்தீனியர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது பற்றி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனைக் கோருவதற்காக தூதர்களை வாஷிங்டனுக்கு அனுப்பி வைக்கவும் பலஸ்தீன விடுதலை இயக்கம் முடிவு செய்துள்ளது.

பி. பி. எிக்கு அளித்த பேட்டி ஒன்றில்— இஸ்ரேலியர்களை இனியும் நம்பமுடியாது என்று யாஸீர் அராபாத் தெரிவித்தார்.

இதனிடையில் — கிறைவைக் கப்பட்டுள்ள பலஸ்தீனியர்களில் 500 பேரை இவ்வாரம் விடுவிக்கப்போவதாக இஸ்ரேல் நேற்று அறிவித்தது.

# சமாதானப் பேச்சு எதுவும் யாழ்ப்பாணத்திலே வேண்டும்

## புலிகளின் விருப்பம் |இது என்கிறார் வண. பிதா

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான புதிய சமாதானப் பேச்சுகள் எதுவும் யாழ்ப்பாணத்திலேயே தான் நடக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகள் இயக்கம் தெரிவித்திருப்பதாக கத்தோலிக்க துறவிகள் சபைத் தலைவர் வண. பிதா அல்பிரட் அலெக்ஸாண்டர் தெரிவித்திருக்கிறார்.

'சண்டே ஐலண்ட்' இத்தகவல வெளியிட்டிருக்கிறது.

குடாநாட்டுக்கு வெளியே எத்தப் பேச்சுகளும் நடப்பதை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளதாகவும் வண பிதா அல்பிரட் அலெக்ஸாண்டர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வரும் எவரையும் வரவேற்க விடுதலைப்புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

தம் ஊடாக அரசுக்கு விடுதலைப் புலிகள் செய்திகள் எவற்றையும் அனுப்பவில்லை என்றும் அவர் சொன்னார்.

(ஒ-எ)

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமஷ்டி அரசமைப்பு முறை. இந்திய அரசமைப்பின் கீழ் அதிகுள்ள மாநிலங்கள் அனுபவிக்கும் அதிகாரங்களிலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்'' — என்று கூறப்பட்டிருக்கிறது.

பலசர்வதேச அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இந்த யோசனையை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்றன.

அவை ஆணைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதிலும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன

இந்த இயக்கத்தில் உலக திருச்சபைகள் கவுன்சில் முன்னணியில் நின்று செயல்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### நிறைவேறும் சாத்தியம்

ஐ நா. மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நெருங்கிய வட்டாரங்களின் படி —

குறிப்பிட்ட மேற்கு நாடு சமர்ப்பிக்கவுள்ள இந்த யோசனை மிகப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் சாத்தியம் உள்ளது.

அப்படி நிறைவேற்றப்படும் பட்சத்தில் அந்த தீர்மானத்தை நல்ல மனதுடன் அமுல் நடத்தும் கடப்பாடு இலங்கை அரசுக்கு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எப்படியாயினும்—

இந்த நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசு எப்படி நடந்து கொள்ளப்போகிறது என்பது இன்னும் தெரிவரவில்லை.

### இலங்கை அரசுக்கு முன்னர் வெற்றி

முன்னர் இதுபோன்ற நடவடிக்கைகள் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுக்கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்டபோது, இனப்பிரச்சினை விஷயத்தில் ஐ நா ஆணைக்குழு தலையிடுவதற்கு நியாயமான காரணங்கள் இல்லை என்று ஆணைக்குழுவில் பங்கு பற்றிய நாடுகளுக்கு எடுத்துக் கூறி அதனை அந்த நாடுகளை ஏற்றுக் கொள்ள வைப்பதில் இலங்கை அரசு வெற்றி கண்டிருந்தது.

### புலிகளுக்கு ''பிளஸ் பொயிஸற்''

ஆனால் ஈழத்தமிழ்க் குழுக்கள் இம்முறை இனப்பிரச்சினை விவகாரத்தை ஆணைக் குழுக்கூட்டத்தில் கொண்டு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும்—

புலிகளுக்கு ''பிளஸ் பொயிஸற்'' என்றும் ''தஐலண்ட்'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கொள்கையளவில் இப்பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டால், இதனைப் பிரேரித்தவர், விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை திருப்தி செய்யக்கூடிய — மிகக் குறைந்த பட்ச — நிபந்தனைகளுடனான சமஷ்டி அரசாங்கக் கட்டமைப்பு பற்றி விரிவான ஆவணத்தை ஐ நா. மனித உரிமை ஆணைக்குழுவிக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆவணத்தில் —

கிழக்கு மகாணத்தில் ஆம்பாறை மாவட்டத்தை தவிர்ந்த ஏனைய பகுதிகளை வடமாகாணத்துடன் இணைத்து வடக்கு பிரதேசம் ஒன்றை உருவாக்குவது என்ற முக்கிய புதிய நிபந்தனையை நகல் அரசமைப்பில் இணைக்கும்படி கோரப்படும்.

அடுத்த நிபந்தனை—

மாகாணசபைகளை கலைக்க ஜனாதிபதிக்கு உள்ள உரிமையை கட்டுப்படுத்த வேண்டும் என்பதாகும்.

### முன்னரே சமர்ப்பிக்கப்பட்டது

ஐ நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் தற்போது சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் யோசனை போன்ற சில யோசனைகள் அரசாங்கத்துக்கு சில வாரங்களுக்கு முன்பு கொழும்பில் உள்ள முன்னணித் தமிழர்களால் கையளிக்கப்பட்டது தெரிந்ததே.

இந்த யோசனைகள் இலங்கை பவுண்டேசன் இன்ஸ்டிடியூட்டினால் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் ஆராயப்பட்டன. அக்கருத்தரங்கில் பிரதம அதிதியாக ஜனாதிபதி விஜேதுங்காவே கலந்து கொண்டிருந்தார்.

— இவ்வாறு 'தஐலண்ட்' நாளிதழில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை —

கடந்த ஞாயிறு வெளியான 'ஐலண்ட்' பத்திரிகையின் வார இதழில் மேற்படி பிரேரணை தொடர்பான மேலதிக விவரங்கள் வெளியாகியிருக்கின்றன. அவை வருமாறு:-

மேற்கு நாடுகளில் உள்ள அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மற்றும் தமிழ்க்குழுக்கள் கொண்டு வரவுள்ள பிரேரணை [illegible] ராக ஆதரவு திரட்டுவதில் இலங்கை அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டமா அதிபர் திலக் மாரப்பாவை தலைமையிலான நான்கு உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை அரசுக் குழு ஐ நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இப்பிரேரணையை மேற்கு நாடுகளைச் சேர்ந்த குழுக்கள் தாக்கல் செய்யவிருந்தன.

இப்பிரேரணைக்கு எதிராக இலங்கைக்குழு ஏனைய உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது கொழும்பில் சிரேஷ்ட அரசு அதிகாரி ஒருவர் கூறினார்.

ஐ நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இலங்கையின் பெயர் பிரஸ்தாபிக்கப்படவில்லை என்றும் —

அக்கறையுள்ள அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் பொருளாதார மற்றும் சமூக கவுன்ஸிலின் ஆலோசகர் என்ற அந்தஸ்தில் இப்பிரச்சினையை ஆணைக்குழுக் கூட்டத்தில் எழுப்ப முடியும் என்றும் —

கொழும்பில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

---

## வாகனங்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னங்களைப் பரிசோதிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

சகல வாகன உரிமையாளர்களும் வாகனங்களில் செல்லும் போது தமது வாகனங்களுக்குரிய ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர். முக்கியமாக 1993 ஆம் ஆண்டிற்கான இறைவரிப் பத்திரத்தையும் எடுத்துச் செல்லுமாறு கேட்கப்படுகின்றனர். இவ்வானான சட்டரீதியான செயற்பாடுகளை எமது வாகன உரிமையாளர்கள் அறியாதவர்களல்ல.

ஆகவே தயவு செய்து எமது வாகன உரிமையாளர்கள் தங்கள் சிரமத்தைப் பாராது இவ்விடயத்தில் காவல்துறை உறுப்பினர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். — என்று உள்ளது.

(அ)

## கொத்தலாவல பங்களா திடீரெனச் சோதனை!

கொழும்பு, மார்ச் 2

இராணுவத்தில் இருந்து கடந்த வாரம் விலக்கப்பட்ட இராணுவ அதிகாரி ஜெயந்த கொத்தலாவலையின் கோட்டேயிலுள்ள பங்களாவை இரகசியப் பொலீஸாரும் இராணுவப் பொலீஸாரும் கடந்த புதன்கிழமை சோதனையிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இராணுவத்துக்குச் சொந்தமான உடைமைகளை பொறுப்பேற்கும்முகமாகவே அங்கு சோதனை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

அமெரிக்காவில் பயிற்சி பெறச் சென்ற சமயம், அங்கு திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு லெப். கேணல் கொத்தலாவல இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர் என்பதும் —

இவரை பூகரிக்கு இடமாற்றம் செய்ய முடிவாகிய தறுவாயில், திடீரென பதவி நீக்கத்திற்கு உள்ளானார் என்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-எ)

## வாக்களிப்பு ஆரம்பித்த கையோடு

# வவுனியா பகுதியில் நேற்று இரு வேறு தாக்குதல்கள்

வவுனியாவில் நேற்றுக் காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு ஆரம்பித்து கிறிது நேரத்தில் நகரின் முன்னரங்கப் பகுதி மீது விடுதலைப் புலிகள் இரு வேறு தாக்குதல்களை நடத்தியதாகவும்—

படையினரும் திருப்பித் தாக்கியதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியாவிலிருந்து இரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள இரு இடங்களிலேயே இத்தாக்குதல்கள் இடம்பெற்றதாக அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

அரசுக்கு உதவியாகச் செயற்பட்டு வரும் தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்த ஒருவர் இத்தாக்குதலில் காயமுற்றதாக அறிவிக்கப்பட்டது தாக்குதல் பற்றிய மேல் விவரங்கள் தெரியவரவில்லை.

இதற்கிடையில்—

நேற்று முன்தினம் இரவு வானில் சென்று கொண்டிருந்த ஒரு நபர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு அருகே ஆகாயத்தை நோக்கிச் சுட்டுவிட்டு ஓடியதாகக் கூறப்படுகிறது.

## 10 வாக்குப் பெட்டிகள் பொலீஸாரால் கடத்தல்

திருகோணமலைப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து பத்து வாக்குப் பெட்டிகளைப் பொலீஸார் கடத்திச் சென்றதாக முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

''வெரித்தாஸ்'' வானொலி இத்தகவலை வெளியிட்டது.

இராணுவப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை மறுத்துள்ளார்.

## படையினர் பலாத்காரமாக எடுத்துச் சென்ற பெட்டிகள்

கிழக்கில் ஓரிடத்தில் வாக்களிப்பு நிலையத்தில் இருந்த வாக்குப் பெட்டிகளை கடற்படையினர் பலவந்தமாகக் கொண்டு சென்றனர் என்று சில தமிழ்க் குழுக்கள் குற்றம் சுமத்தியிருக்கின்றன.

நெதர்லாந்து வானொலி இத்தகவலை வெளியிட்டது.

இச்சம்பவம் எங்கு இடம் பெற்றது என்பது பற்றிய விவரம் அறிவிக்கப்படவில்லை.

## 60 வீத வாக்களிப்பாம்

நேற்றைய உள்ளூராட்சித் தேர்தல்களில் அறுபது வீதத்துக்கும் அதிகமானோர் வாக்களித்ததாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

அம்பாறையில் 70 வீதமும் திருகோணமலையில் 61 வீதமும் மட்டக்களப்பில் 50 வீதத்துக்கு அதிகமாகவும் வாக்களிப்பு இடம்பெற்றதாக அவர் சொன்னார்.

முஸ்லிம் பகுதிகளில் ஆளும் ஐ. தே. கவுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதால் அங்கு வாக்களிப்பு சுறுசுறுப்பாக இருந்ததாகவும்.

சிங்கள, தமிழ்ப் பகுதிகளில் வாக்களிப்பு மந்தமாக இருந்ததாகவும்—

ஏ. எவ் பி. செய்தியாளர் அமல் ஜெயசிங்கா குறிப்பிட்டார்.

ஆங்காங்கே வன்முறை, பயமுறுத்தல், ஆள்மாறாட்டம், கள்ள வாக்கு அளித்தல் ஆகிய சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அவர் சொன்னார்.

## முறைகேடுகள் குறித்து விசாரணை நடக்குமாம்

ஏறாவூர், காத்தான்குடிப் பகுதிகளில் வாக்களிப்பின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தப்படுவதாக மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து மட்டக்களப்பு அரச அதிபரிடமிருந்து அறிக்கையை எதிர்பார்த்து இருப்பதாகவும்—

அது கிடைத்ததும் அடுத்த நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும் என்றும்—

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

## தமிழ் மக்களின் இன்னல்கள்: தென்பகுதியில் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வடபகுதி மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் குறித்து தென்பகுதியில் சிங்கள மக்களுக்கு விளக்கப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் யாழ் வந்து திரும்பிய மெதடிஸ்த திருச்சபை ஊழியர்கள் தென் பகுதியில் விசேட கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கஷ்டங்கள் குறித்து அங்கு விளக்கி வருகின்றனர்.

கடந்த சில தினங்களில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில் சிங்கள மக்களுக்கு வடபகுதி நிலைமை குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

யாழ் மக்கள் சமாதானத்தை விரும்புவது பற்றியும், தமிழ் மக்களின் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பது போன்ற பல்வேறு விடயங்கள் சிங்கள மக்களுக்கு விளக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தை நிறுத்த வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தென்பகுதி மக்கள் ஆர்வத்துடன் கேட்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)


கனிவளம் பெருக்கி
பிணி தனை குறைப்போம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு தமிழர் மீது விதித்துள்ள தடைகள் விடுதலையின் தேவையை உணர்த்துகிறது

## வெகுஜன ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 2

பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, வாழ்க்கையின் மிக அத்தியாவசிய தேவைகளுக்கான தடை ஆகியன, விடுதலைக்கான அவசர தேவையை தமிழர்களுக்கு மேன்மேலும் உணர வைத்துள்ளன.

தங்களது சொந்த மண்ணில், தங்களுக்குச் சொந்தமான உரிமைகளைப் பெரும்பான்மையினரின் உரிமைகளை எவ்விதத்திலும் பாதிக்காமல் பெறுவதற்காக தமிழ் மக்கள் எவ்வித தியாகமும் செய்வதற்குத் தயாராக உள்ளார்கள்.

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம், அரசாங்க அதிபர் மூலமாக ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

யுத்த வெற்றிகளால் தமிழ் மக்களை நசுக்கி விட முடியாது. பிரதேசங்களை இராணுவம் பிடித்தாலும் போராட்டத்தைக் கொல்ல முடியாது. ஏனென்றால் மனித கௌரவத்துடன் வாழும் மக்களாக விளங்கவே தமிழர்கள் இப் போராட்டத்தை நடத்துகிறார்கள். — என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ சகல பொருளாதார முற்றுகையும் தடையும் நீக்கப்பட்டு பாவனைப் பொருள்கள் தங்குதடையின்றி வர அனுமதிக்க வேண்டும்.

★ போக்குவரத்துக் கட்டணத்தை நாம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கி மற்றப் பிரதேசங்களைப்போல வடக்கிலும் பொருள்களின் விலை வாசிகளை நிலை நிறுத்த வேண்டும்.

★ வைப்பிறப்பட்ட கிராமங்களிலிருந்து பாதுகாப்புப் படையினரை வாபஸ் பெற்று இடம் பெயர்ந்த மக்கள் தமது இல்லங்களுக்குத் திரும்பி சமாதானமாக வாழவதை செய்ய வேண்டும்.

★ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் நல்லெண்ண சமிக்ஞையை ஏற்றுக் கொண்டு அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, மோதல்களை உடனடியாக நிறுத்தி சமாதானத் தீர்வுக்கான திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். (அ-ம-162)

## வடக்கு - கிழக்கு நிலைவரம் குறித்து சீன உதவிப் பிரதமருக்கு அமைச்சர் ஹமீத் விளக்கம்

கொழும்பு, மார்ச் 2

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன உதவிப் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான கியாங்சின் சென் நேற்று வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதைச் சந்தித்தபோது — வடக்கு- கிழக்கு நிலைவரம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு விளக்கிக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — கியாங்சின் சென் நேற்றுக் காலை ஜனாதிபதி விஜேதுங்காவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இதற்கு முன்பதாக அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

இருதரப்பு உறவுகள், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி ஆகியன குறித்து இரு தலைவர்களும் பேசினார்கள். (ஒ-எ)

## இரண்டாவது தடவையாக 4 வீற்றர் மண்எண்ணெய்

### ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

மாஹோ கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள மண்எண்ணெய் குடும்பம் ஒன்றுக்கு 4 வீற்றர் என்ற முறையில் பங்கீட்டு அடிப்படையில் இரண்டாவது தடவையாக விநியோகிக்கப்பட இருப்பதாக யாழ் அரச அதிபர் திரு சே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்த அற்குண்டுச் சத்தங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

பூநகரி சங்குப்பிட்டிப் பக்கமாக நேற்றுக் காலை 7 மணியளவில் அடுத்தடுத்து குண்டுச் சத்தங்கள் கேட்டன. அப்பகுதியில் வான் தாக்குதலும் இடம்பெற்றதாக பாஷையூர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, பூநகரி, கல்முனை கடற்பகுதியில் இருந்து கடற்படையினர் ஆலடிப்பக்கமாக பிரங்கித் தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

தக் கப்பலில் 7 ஆயிரம் பரல் மண்எண்ணெய் எடுத்து வரப்பட்டுள்ளது. கப்பலில் இருந்து இறக்கப்படும் மண்எண்ணெய் பரல்கள் பருத்தித்துறையில் வைத்தே ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (ஒ-5-162)

## குடாநாட்டில் வாகனங்கள் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 2

குடாநாட்டில் நேற்று பல இடங்களிலும் வாகனங்கள், மற்றும் மோட்டார் சைக்கிள்கள் காவல்துறையினரின் திடீர் சோதனைக்கு உள்ளாகின.

பதிவு செய்யாத வாகனங்கள், இலக்கத் தகடு இல்லாத வாகனங்கள் வீதிகளில் மறிக்கப்பட்டு தண்டம் அறவிடப்பட்டன.

வாகனங்களை பதிவுசெய்து வரி செலுத்தியிருந்தும் அவற்றிற்கான பத்திரங்களை தம்முடன் கொண்டு செல்லாதோரும் 25 ரூபா அபராதம் செலுத்த நேரிட்டது. (ஒ-9-117-143-152-173)

## மாத மத்தியில் கொழும்புக்கு இந்து குருமார்கள் செல்வர்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். மாவட்டத்தில் இருந்து இந்து குருமார் அடங்கிய நல்லெண்ணத் தூதுக்குழு இம்மாத நடுப்பகுதியில் கொழும்பு செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நல்லெண்ணக் குழுவில் அங்கம் வகிக்கும் குருமாரின் விவரங்களை அனுப்புமாறு இக் குழுவினரை அழைத்துச் செல்லவிருக்கும் மெதடிஸ்த திருச்சபை கேட்டுள்ளது.

இந்துக் குருமார் குழு தெற்கில் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான ஒழுங்குகளை மெதடிஸ்த சபை செய்துள்ளது. (ஒ-3)

## ஆலயங்களில்

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் கோயில் மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 11 ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ந-152)

## இன்று

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் கட்டடத் திறப்பு விழா இல 81 பிறவுண் வீதியில் இன்று புதன் முற்பகல் 11 மணிக்கு அதிபர் திரு. ந. தர்மபாலன் தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ். வடக்கு கல்வி வலய ஆரம்ப நிலை கல்வி மேம்பாட்டுச் செயல்திட்டம் தொடர்பாக ஆரம்ப கல்வி முதன்மை ஆசிரியர், தமிழ் முதன்மை ஆசிரியர், உதவிக்கல்விப் பணிப்பாளர் (சித்திரம்) ஆகியோரை இன்று காலை 9 மணிக்கு நம்மை சந்திக்கும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

★ ★ ★

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. நகந்தசாமிக்கு சேவைநலன் பாராட்டு விழா இன்று மருதனார்மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் நடைபெறும். புதிய அதிபர் திரு. பொ. கமலநாதனின் தலைமையில் இவ்விழா நடைபெறும். (ஒ-89)

★ ★ ★

பளை கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான உடற்கல்விப் போட்டிகள் இன்று புதன் காலை 9 மணி முதல் பளை மகாவித்தியாலய மைதானத்தில் பளைப் பிரதேசக் கல்வி அலுவலர் திரு. ப. அரியரத்தினம் தலைமையில் நடைபெறும். (ஒ-117)

★ ★ ★

மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களில்-வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 56 மாணவர்களுக்கு — யாழ். வட்டவியோகழகமும் யாழ். பரியோவான் கல்லூரி லியோ கழகமும் இணைந்து 2 ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளை வழங்கும். (ஒ-3)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட ப.நோ.கூ. சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ)

## திருத்தம்

கோப்பாய், இருபாலைச் சந்தி மக்கள் நலன் காக்கும் பிரிவு அங்கத்தவர்களுக்கான, கோப்பாய் பிரதேச முப்பது (30) பகுதிகளில் நிர்வாகக் குழுக்களுக்கான வருடாந்தத் தேர்தல் 6-3-1994 முதல் 27-3-1994 வரை இடம் பெறும் நேற்றைய உதயனில் இரண்டாம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில் 6-3-1994 என்பதற்குப் பதிலாக 3-6-1994 என தவறாகப் பிரசுரமாகிவிட்டது.

## பேராதனை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது.

பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து களனிப் பல்கலைக் கழக மாணவர் பேரவையினர் களனிப் பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

## பலத்த

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் — கொழும்பில் உள்ள சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.


யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மகாநாடு

1. இம் மகாநாட்டை கூட்டுவது யார்?

"அனைத்துலக மக்களே நமதாண்டவர் - கிறிஸ்துவுக்கு கதவைத் திறந்து விடுங்கள்" — என்ற வத்திக்கான் நகரில் இருக்கும் திருத்தந்தையின் அறைகூவலை ஏற்று, இலங்கை ஆயர் சங்கத்தின் முடிவுப்படி கூட்டப்படுகிறது.

2. இம் மகாநாடு எங்கெங்கு நடத்தப்படுகிறது?

இம்மகாநாடு இலங்கையின் ஆயர்கள், குருக்கள், பொது நிலையினர் இணைந்து — இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் மகாநாடாக — தேசிய ரீதியில் கொழும்பில் நடத்தப்படும். அதை விட இலங்கையின் ஒவ்வொரு மறை மாவட்டத்திலும் மறை மாவட்ட ஆயர் தலைமையில் நடத்தப்படும். ஒவ்வொரு மறை மாவட்ட கத்தோலிக்க மக்கள் அனைவரும் இதில் பங்கு கொள்வர்.

3. யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி மகாநாடு எப்போது கூட்டப் பெறுகிறது?

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப் பணி மகாநாடு இம்மாதம் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடத்தப்படுகிறது. குருக்கள், பொது நிலையினர், துறவியர் எல்லோரும் இம் மகாநாட்டில் பங்கு கொள்வர்.

4. மேய்ப்புப்பணி மகாநாட்டின் நோக்கம் என்ன?

கி. பி. மூன்றாவது ஆயிரமாம் ஆண்டுகளின் உதயத்தை நோக்கி நிற்கிறோம். இப்புதிய காலத்தில் காலடி வைக்க முன்னர் நம்மை ஆய்வு செய்வது தான் முக்கிய நோக்கம். எம் மீட்பராகிய இயேசு அப்போஸ்தலர் வழியாக அமைத்த மறை பரப்புப் பணியையும், தனிமனித புதுப்பித்தலையும் புத்துணர்வுடன் செயல்படுத்த திருத்தந்தை நமக்கு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்று "தன்னை புதுப்பித்து பகிரும் ஒரு திருச்சபையை நோக்கி" என்னும் தலைப்பில் நம்மை ஆய்வு செய்வது தான் நோக்கம்.

5. முன்பு இது போன்ற மகாநாடு நடத்தப்பட்டதா?

ஆம். இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் தேசிய மறைப்பணி சங்கம் நடைபெற்றது. அதாவது இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் நடைபெற்ற பின்னர் சங்கம் வெளியிட்ட நெறிமுறைகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்த தேசிய ரீதியில் முதலாவது தடவையாக இலங்கையின் தேசிய மறைப்பணி சங்கம் கூட்டப்பட்டது.

அன்பளிப்பு:

திருமதி பி. எல். சின்னத்துரை

(அதிபர்), ஆசிரியர்கள், மாணவர்.

யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.

பொது மக்கள் தொடர்புக்குழு, மேய்ப்புப்பணி மகாநாடு.

(29706)



மற்றமோர் அண்ணா தயாரிப்பு

திடீர் தோசை மா

250 கிறாம் கொண்ட மாப் பைக்கட்டிலிருந்து 14 தோசை சுடமுடியும். 250 கிறாம் மாவை எடுத்து அளவான தண்ணீர், உப்பு சேர்த்து உடனடியாகவே தோசை சுடலாம். விரும்பினால் நேரம் கழித்தும் சுடலாம்.

கிடைக்குமிடம்:

அண்ணா கோப்பிக் கடை

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில்

(சி/7428)



கூறுவிலை கோரல்

றெப்பானா நிறுவனம் கீழ்க்கண்ட பொருள்களுக்கு உற்பத்தியாளர்/விற்பனையாளரிடம் இருந்து கூறுவிலைகளைக் கோருகின்றது.

1. பெட்சீற் (இரட்டை விரிப்பு) — 1,000
2. பெட்சீற் (ஒற்றை விரிப்பு) — 1,000
3. புறிபாய் (நெசவு செய்யப்பட்டது) நீளம் — 5½' X 3½'
4. புறிபாய் (நெசவு செய்யப்பட்டது) நீளம் — 5½' X 3' ] 3,000 பாய்கள்

மேற்கண்ட கூறுவிலைகள மாதிரிகளுடன் 07-03-1994 மாலை 4-30க்கு முன்னர் றெப்பானா, இல. 15, றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அரக்கு முத்திரை இடப்பட்டு நேரில் கையளிக்கவும்.

திட்ட இணைப்பாளர்,
றெப்பானா,
யாழ்ப்பாணம்

(29697)



உ

ஸ்ரீதேவி குருகுலம்

(வேதாகம கலாசாலை)

காங்கேசன்துறை வீதி, மல்லாகம் - கிளை—1

இன்று 2-3-94 முதல்

புதிய வகுப்பு ஆரம்பம்

புதன், சனி, ஞாயிறு கிழமைகளில்
மாலை 6.30 மணி முதல்-9.00 மணிவரை நடைபெறும்
செம்மணி வீதி நாயன்மார்கட்டு - கிளை – 02
தினசரி அதிகாலை 4.00 மணிமுதல் - 5.30 மணிவரை

வேத வகுப்பு

தினசரி காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை

ஆகமம், வைதீகம், சோதிடம்

வைதீக சோதிட ஆசிரியர்:
கலாநிதி மறைநிரு
ஸ்கந்த சாம்பசிவசிவாசாரியார் அவர்கள்
(போஷகர் ஸ்ரீதேவி குருகுலம்)

கல்வி கற்க விரும்பும் அந்தண சிறார்களை அன்புடன் அழைக்கிறோம்

சுபம்

சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்கள்
(அதிபர்)

நாயன்மார்கட்டு.
மல்லாகம். (29703)



உதவித் தாதிப் பயிற்சி நெறி
சுதேச மருத்துவக் கலைவயாவர் பயிற்சி நெறி

மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிக்கு 14-03-1994 க்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளவும்.

புனோரன்ஸ் நேர்ஸிங் பயிற்சிக் கல்லூரி

(தான்சன் கல்வி நிறுவனம்)
மருதனார்மடம் (சி/2070)



மரண அறிவித்தல்

கந்தப்பிள்ளை நாகரத்தினம்

(மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை முன்னாள் அதிபர்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அளவெட்டியில்வசித்தவருமாகிய கந்தப்பிள்ளை நாகரத்தினம் நேற்று (1-3-94) இல் காலமாகிவிட்டார்.

அன்னார் உருக்குமணியின் அன்புக் கணவரும் (இளைப்பாறிய ஆசிரியை அருணாசலம் வித்தியாசாலை), சுசீலா, முகுந்தன் (Holiday Inn), ஸ்காந்தன் (Grindlays Bank) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடராஜா, சியாமளாதேவி, அமுதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்சன், வாசீசன், வைஜெயந்தன், மிருணாளினி, சுபாசினி, அருணன், அர்ஜுன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெருமாக்கடவையில் உள்ள இல்லத்தில் இன்று (2-3-94) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந.சுதர்சன் (பேரன்)

பெருமாக்கடவை, அளவெட்டி. நா.உருக்குமணி (மனைவி) (29705)



உ
ஸ்ரீராம ஜெயம்

உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்,

ஸ்ரீ மஹா கணபதியின் அருளுடனும், ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி அவர்களின் அனுக்கிரகத்துடனும் நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ, ஸ்ரீமுகஸு மாசிமீ 18 ஆந்நாள் [02—03—1994] புதன்கிழமை சித்தயோகமும் சுவாதி நக்ஷத்திரமும் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 9-00 மணி முதல் 10-30 மணி வரையுள்ள மேட லக்கின சுபகூர்த்த குருஹோரையில்

ஆவரங்கால் நாராயணசாமிக் குருக்கள் அவர்களினதும்
யாழ்ப்பாணம் கனகசபாபதிக் குருக்கள் அவர்களினதும்
பௌத்திரனும், எமது ஏக குமாரனுமாகிய
சிரஞ்ஜீவி
பிரணவசர்மா அவர்களுக்கு

உபநயன பிரம்மோபதேசம் செய்வதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் எமது இல்லத்தில் நடைபெறுவதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்ர பந்துக்களுடன் முன்னதாகவே வருகைதந்து சுப முகூர்த்தத்தைச் சிறப்பித்து எமது குமாரனை ஆசீர்வதித்து எங்களையும் கௌரவித்து மகிழ்விக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வரவேற்பாளர்கள்:
பிரம்மஸ்ரீ அ. நா. சுப்பிரமணியக் குருக்கள் தம்பதிகள்
பிரம்மஸ்ரீ அ. நா. பாலச்சந்திரசர்மா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ ச. கௌரிசங்கரசர்மா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ க. செந்தில்நாதசர்மா தம்பதிகள்
உடுவில் தெற்கு, மருதனார்மடம்.

இங்ஙனம்
பிரம்மஸ்ரீ
அ. நா. சோமாஸ்கந்தசர்மா
தம்பதிகள்
இணைப்பாளர் வாத்தியத்துறை,
இராமகிருஷ்ண மிஷன் நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(7022)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/3 இல் உள்ள அச்சகத்தில் 03-03-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org